பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 16 (1—11—72) புதன் — வெளியூர்: ஐப்பசி 17 (2—11—72) வியாழன் [இதழ்: 115

தனித் தமிழ் மாநில 16-ம் ஆண்டு விழா

ஆந்திரம் தனியாகப் பிரிந்தபின், தமிழ் மாநிலம் அமைக்கப்பட்டு 16 ஆண்டுகள் ஆகின்றன.

இதனையொட்டி, 'தமிழ் மாநிலம் அமைந்த 16-வது ஆண்டு நிறைவு விழா 1—11—72 மாலை 6 மணிக்கு, சென்னை இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம் தலைமைதாங்குகிறார்; முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழாவில் கலந்துகொண்டு பேசுகிறார்.

சுயநலவாதிகளின் சூழ்ச்சி வலை

மாணவர்கள் சிக்கிவிடக் கூடாது

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வன்முறைக்கு வித்திடுகின்றனர்

ஆக்கப் பணிகளில் ஈடுபட அறிவுரை

தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெளிவுரை

புதுடில்லி, நவ. 1—

"தொல்லைகள் மிகுந்த ஒரு காலக்கட்டத்தை இந்தியா இப்போது கடந்து கொண்டிருக்கிறது; சில சுயநலக்காரர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மாணவர்களை வன்முறைக்குத் தூண்டிவிடுகிறார்கள்; இது மிகவும் வருந்தத்தக்கது; இந்தச் சுயநலக்காரர்களின் வலையில் மாணவர்கள் வீழ்ந்துவிடக் கூடாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி சுட்டிக்காட்டி வேண்டுகோள் விடுத்தார்; சர்தார் வல்லபாய் பட்டேலின் 97-வது பிறந்த நாள் விழாவில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"மத — மொழிப் பிரச்சினைகளிலிருந்து மாணவர்கள் ஒதுங்கி நின்று — நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு சமநிலையான கண்ணோட்டத்தை மேற்கொள்ளவேண்டும்.

மாணவர்கள்தான் வருங்காலத்தின் தலைவர்கள்; நாட்டின் அரசியல் — பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதில் அவர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.

நகர்ப்புறப் பகுதிகளின் உணர்ச்சியை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான அறிகுறியாக எடுத்துக்கொள்ளக் கூடாது; கிராமங்களின் வளர்ச்சிக்காக நாம் செய்யவேண்டியது ஏராளமாக இருக்கிறது."

பத்திரிகைக் காகித கட்டுப்பாடு உத்தரவு

புதுடில்லி, நவ. 1—

'பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு' என்பதன் பெயரால், 'நாளிதழ்கள் பத்துப் பக்கங்களுக்கு மேல் பிரசுரிக்கக்கூடாது' என்று உச்சவரம்பு நிர்ணயித்து மத்திய அரசு, உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவுக்கு எதிராகத் தலைமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

"பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் நியாயமானவை என்று கருதுவதற்கில்லை" என்று சுட்டிக்காட்டித் தலைமை நீதிமன்ற நீதிபதிகள், 'அரசு பிறப்பித்த உத்தரவு செல்லாது' என்று தீர்ப்பு அளித்துள்ளனர்.

தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பை, மத்திய அரசு இப்போது பரிசீலனை செய்து வருகிறது.

துப்பாக்கிச் சூட்டில் மாண்டவர் குடும்பத்துக்கு உதவிப் பணம்

வேலூர், நவ. 1—

வேலூரை அடுத்த கண்ணமங்கலத்தில், போலீசு நிலையத்தைத் தாக்க முயன்றவர்கள்மீது நடைபெற்ற, 'சிறிய ரவை' துப்பாக்கிச் சூட்டில் சங்கர் என்ற இளைஞர் மரணமடைந்தார்.

அவருடைய குடும்பத்துக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 3,000 உதவிப் பணம் வழங்குமாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்.

இத்தொகையை, சங்கர் குடும்பத்தினரிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் வி. ஆறுமுகம் வழங்கி ஆறுதல் கூறினர்.

46 பஞ்சாலைகளை அரசு ஏற்றது

தமிழ்நாட்டில் மூடிக் கிடந்த ஆலைகள் செயல்படத் தொடங்கும்

குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் பிறப்பித்தார்

புதுடில்லி, நவ. 1—

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நொடித்துப்போன 46 பஞ்சாலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் மேற்கொண்டது.

அரசுக்குச் சொந்தமான தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் இந்த ஆலைகளின் பொது காப்பாளராகச் செயலாற்றும்; அரசு சார்பாக இந்த ஆலைகளைக் கார்ப்பரேஷன் நிர்வகிக்கும்; ஒவ்வொரு ஆலைக்கும் தனியாகக் காப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

நிர்வாக ஊழல் — உற்பத்தியில் வீழ்ச்சி — வேலைவாய்ப்புச் சட்ட ரீதியான சங்கடங்கள் ஆகிய அம்சங்கள் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட்ட பின்னர் 46 பஞ்சாலைகளின் நிர்வாகம் மத்திய அரசால் ஏற்கப்பட்டதாக அதிகாரபூர்வமான செய்திக் குறிப்பு ஒன்று கூறியது.

சாதாரண மக்கள் பயன்படுத்தும் துணி ரகங்களை உற்பத்தி செய்யவும் — வேலை வாய்ப்பை அளிக்கவும் — துரிதமாக நவீனப்படுத்த வகை செய்யவும் இந்த நடவடிக்கை உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"தொழில் வளர்ச்சி ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் ஆலைகளின் நிர்வாகத்தை மேற்கொள்ளும் நடைமுறை வீண் காலதாமதத்தை ஏற்படுத்துமாதலால் அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டியதாயிற்று" என்று செய்தி குறிப்பு கூறியது.

இந்த ஆலைகளின் நிர்வாகத்தை அரசு மேற்கொள்ள வகை செய்யும் குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம் உடனடியாகச் செயலுக்கு வருகிறது.

1.10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

'அவசரச் சட்டத்தின் மூலம் 1.10 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளருக்கு வேலை வாய்ப்பு நீடிக்கும்"

என்று அயல்நாட்டு வர்த்தக அமைச்சர் எல். என். மிஸ்ரா கூறினர்.

பெரும்பாலான ஆலைகள் மோட்டா ரகம் — நடுத்தர ரகம் துணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தன.

தமிழ்நாட்டில்:

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட ஆலைகள் அரசு நிர்வாகத்தின்கீழ் வரும்:—

- பலராம வர்மா நெசவாலை— செங்கோட்டை
- காளீசுவரா ஆலை—கோவை
- காளீசுவரா ஆலை—காளையார் கோவில்
- பங்கஜா ஆலை—கோவை
- பயனீர் நூற்பாலை—கோவை
- சாந்தா ஆலை—கோவை
- கோதண்டராம் நூற்பாலை— மதுரை.

தொழிற்சாலை விபத்துக்கள்

மேற்குவங்கம்முதலிடம் வகிக்கிறது

ராஞ்சி, நவ. 1—

இந்தியாவில் 1971–72-ம் ஆண்டில மற்ற மாநிலங்களைவிட மேற்கு வங்கத்திலுள்ள தொழிற்சாலைகளிலேயே அதிக விபத்துகள் நடந்துள்ளன.

தொழிற்சாலைகள் விபத்துகள் நடப்பது அதிகரித்து வருவதாகவே புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

1967-ம் ஆண்டு முதல் 1972-ம் ஆண்டு வரையில் நடந்த தொழிற்சாலை விபத்துகள் குறித்துக் கணக்குப் பார்த்தால், ஆண்டுக்கு ஆண்டு இவை அதிகரித்து வருவது தெரிய வருகிறது; குறிப்பாக 1969-ல் அதிக விபத்துக்கள் நடந்துள்ளன.

1967-ம் ஆண்டில் தொழிற்சாலை விபத்துக்களில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 19,870 ஆகும்; 1971-72-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 3,22,116 ஆக உயர்ந்துள்ளது. இது 62.30 சதவீத உயர்வாகும்.

சட்டம் — ஒழுங்கைத் தமிழக அரசு பார்த்துக்கொள்ளும்

கேரளக் காங்கிரசு உறுப்பினரின் விஷமக் கேள்விக்குப் பதில்

தலைமையமைச்சர் இந்திரா காந்தி முன்னிலையில் நாஞ்சில் கி. மனோகரன் சூடு

புதுடில்லி, நவ. 1

நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப உயர்த்த வேண்டும் என்று தேர்தல் குழு கூறியுள்ள பரிந்துரையை ஆலோசிப்பதற்காக தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூட்டிய எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கேரளக் காங்கிரசு உறுப்பினரின் விஷமத்தனமான கேள்விக்கு கழக உறுப்பினர் நாஞ்சில் கி. மனோகரன் சுடச் சுடப் பதிலளித்தார்.

"தமிழ்நாட்டில், சட்டம் — ஒழுங்கு நிலைமை எவ்வாறு இருக்கிறது" என்று கேரளக் காங்கிரசு உறுப்பினர் பாலகிருஷ்ணன் என்பவர் வினவினர்.

உடனே மக்களவை தி. மு. க. குழுத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன் எழுந்து, 'அந்தப் பிரச்சினை பற்றி இங்கு பேசத் தேவையில்லை; சட்டம் — ஒழுங்கை நிலைநிறுத்தத் தமிழக அரசுக்கு முழுத் திறமை இருக்கிறது" என்று கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:—

"சட்டம் — ஒழுங்கு என்பது மாநில அரசுக்குரிய பிரச்சினை; இதில் மத்திய அரசு தலையிட உரிமையில்லை.

தமிழ்நாட்டில் தற்போது சட்டம் — ஒழுங்கு நிலை, கட்டுக்கு அடங்கியுள்ளது.

அயல் மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்கள் தமிழ்நாட்டு அரசு மீது குற்றம்சாட்டும் வகையில் பேசத் தேவையில்லை.

இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் சுவரண் சிங், கோகலே, இராஜ் பகதூர், மேத்தா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போனசு சட்டம்

மாற்றுவதற்கு வழிகோலப் புதிய மசோதா

புதுடில்லி, அக். 31—

சென்ற செப்டம்பர் 23-ந் தேதி பிரகடனம் செய்யப்பட்ட போனசு பட்டுவாடா (திருத்தப்பட்டது) சட்டத்தை மாற்றுவதற்கு வழி செய்யும் புதிய மசோதா ஒன்று நாடாளுமன்றத்தில், வரும் கூட்டத் தொடரில் அளிக்கப்படும்.

1970—71, 1971—72 கணக்கிட்டு ஆண்டுகளுக்கான போனசு (பட்டுவாடா செய்யப்பட்டது — செய்யப்படவேண்டியது) தொகைகளை ஒப்பிட்டு, அதிகம் உள்ள தொகை ஊழியர்களின் வைப்பு நிதிக் கணக்கில் சேர்க்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

பம்பாயில் நமது பாசறை

[மா. செங்குட்டுவன்]

அரசியலில் புதிய 'சாலங்கங்க' ஆரம்பமாகிவிட்ட புதுக் கட்சி ஸ்தாபகரும்--அவரைத் தற்காலிகமாக ஆதரிக்கத் தலைப்பட்டிருக்கும் ஏடுகளும் நாள்தோறும் விட்டுக்கொண்டிருக்கும் 'சாடு'களைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வருகிறது!

புதுக் கட்சி பிறந்து என்னவோ எட்டு நாட்கள் ஆவதற்குள் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான கிளைகள்--இலட்சக்கணக்கான உறுப்பினர்கள் சேர்ந்துவிட்டதாகக் கணக்குத் தருகின்றனர். இந்த 'எட்டுக் கணக்கு'த் தொடுக்கும் கல்ல மற்றவர்களுக்கும் தெரியாத ஒன்று அல்ல; பொய்யைச் சொன்னாலும் கொஞ்சமேனும் பொருந்தச் சொல்ல வேண்டும்.

அங்குக் கட்சிக்கு (…) மட்டுமல்லாமல் கேரள--கருநாடக மாநிலங்களிலும் கிளைகள் அமைக்கப்பட்டுவிட்டனவாம்; அமைப்பதற்கு நமக்குக் கவலை இல்லை. எங்கே எத்தனைக் கிளைகள் அமைந்தாலும்--எத்தனை இலட்சம் உறுப்பினர்கள் சேர்ந்தாலும், அதனால் நமது கழகம் இம்மியளவும் பாதிக்கப்படப்போவதில்லை!

கழகம் எங்கும் கட்டுக்கோப்புடனேயே இருந்து செயலாற்றி வருகிறது; உண்மையான கழகச் செயல்வீரர்களை--பொறுப்புள்ள கழகத் தொண்டர்களை எவராலும் மாற்ற இயலவில்லை என்பதை நாடறியும்!

கழகத்திற்குள் எப்படியோ புகுந்துவிட்ட 'வேலி'களும், தங்கள் சுயலாப வேட்கைக்குக் கழகத்தைப் பயன்படுத்திக்கொள்ள முயன்று ஏமாந்தபோன 'எரிச்சல்காரர்'களுமே இப்போது புதுக் கட்சிக்குப் புகலிடம் தேடிச் சென்றிருக்கின்றனர். 'கழிக்கப்பட வேண்டியவை'கள் தாமே கழிந்து போய்விட்டன; 'களையெடுக்கப்பட வேண்டியவை' தாமே அகன்றுவிட்டன; இனி கழகச் செம்பயிர் செழித்து வளரும்; உண்மையான கழகத் தொண்டர்களெல்லாம் உணர்ச்சியும் எழுச்சியும் கொண்டு செயலாற்ற வாய்ப்பு ஏற்படும்.

மாற்றுக் கட்சியிலும்--வேற்றுக் கட்சியிலுமிருந்து 'இரவல் சரக்'காகக் கிடைத்துள்ள ஆட்களைக் கணக்குப் போட்டுத்தான் 'புதுக் கட்சி ஸ்தாபகர்' (…) போடுகிறார்! இந்த இரவல் சரக்கு எத்தனை நாளைக்குத் தன்னுடன் இருக்கும் என்பதை அவருக்கு எடுத்துச் சொன்னாலும், அவர் காதில் இப்போது ஏறாது! அந்த அளவுக்குப் புதுக் கட்சி கண்ட திகைப்பில் அவர் இருந்து வருகிறார்!

பம்பாயிலும் புதுக் கட்சிக்குப் பல கிளைகள் தோன்றியிருப்பதாகவும், புதுக் கட்சிக்கு நூற்றுக்கணக்கில் அங்கு உறுப்பினர்கள் சேர்ந்திருப்பதாகவும், ஆயிரம்--இரண்டாயிரம் பேர் என்ற அளவில் ஊர்வலம் நடத்தியதாகவும் பத்திரிகைகளில் செய்தி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

தமிழ்நாட்டிற்குள்ளேயே, நடவாதவற்றையெல்லாம் நடந்ததாகவும், இல்லாதவையும் சொல்லாததையும் இட்டுக்கட்டியும் செய்தி வெளியிடும் ஏடுகள்; பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பம்பாயைப் பற்றிக் கயிறு திரிப்பதற்குக் கேட்கவா வேண்டும்?

பம்பாயில் நமது கழகம் எந்த அளவுக்கு அசைக்க முடியாத ஒரு கோட்டையாக உள்ளது என்பதை, 'நேரில் கண்டு வந்தவன்' என்ற முறையில் தமிழகத்து மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பம்பாய் மாதுங்கா லேபர் கேம்பில் உள்ள பேரறிஞர் அண்ணு குறள் வளர்ச்சி மன்றச் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அண்ணு பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்வதற்காகச் சென்ற வாரம் நான் சென்றிருந்தேன்; நான் மட்டுமல்ல--இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்., முன்னாள் சென்னை மேயர் திரு. சா. கணேசன் ஆகியோரும் அழைக்கப்பட்டு அந்த விழாவில் கலந்துகொண்டனர்.

அக். 20-ம் நாள் மாதுங்கா 'இந்தியன் ஜிம்கானு' திடலில் அண்ணு பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் குழுமியிருந்தனர்; தமிழ்நாட்டில் நமது கழகக் கூட்டம் நடைபெற்ருல் எப்படியிருக்குமோ அதே போல கூட்டம் இருந்தது.

தோழர் அமுதன் தலைமையில் கூட்டம் தொடங்கியது; தலைமையுரைக்குப் பின் மாதுங்கா தி.மு.க. துணைச்செயலாளர் சண்முகவேலு பேசினர்; அடுத்து, சென்னையிலிருந்து வந்திருந்த முன்னுள் மாநகராட்சி உறுப்பினர் எம்.எஸ். இளங்கோ பேசத் தொடங்கினர்.

கூட்டம் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெறுவது கண்டு பொருத எதிர்க் கட்சிக்காரர்கள் சிலர் குழப்பம் விளைவிக்க முயன்றனர்; ஓரத்தில் நின்றுகொண்டிருந்த அந்தக் காலிகள் 'ஊளை'யிட்டனர்; அந்தக் காலிகளை அடையாளம் கண்டு பிடித்துவிட்ட நமது கழகத் தோழர்கள், அவர்களைப் பிடித்து அப்புறப்படுத்தினர்; அவர்கள், தொலைவில் சென்று மறைந்திருந்து கற்களை வீச ஆரம்பித்தனர்; இரண்டொரு கற்கள் மேடை மீது வந்து விழுந்தன; ஒரு கல்--திரு. சா. கணேசன் மார்பில் பட்டது; என்மீது வந்து விழவிருந்த கல்லை கூட்டத் தலைவர் தடுத்து கையிலே பிடித்துவிட்டார்; தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. இந்த நேரத்தில் திடீரென்று ஒரு குண்டன் ஓடிவந்து குழல் விளக்குகளை உடைத்தான்; அதற்குள் இன்னொருவன் ஒலிபெருக்கி மீது கல்லை வீசினன்; ஒலிபெருக்கிக்காரர், தமது உடைமைக்குச் சேதம் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி, உடனே ஒலிபெருக்கிக் கருவியை மேடையிலிருந்து கீழே இறக்கிவிட்டார்; கண்மூடித் திறப்பதற்குள் இந்த நிகழ்ச்சி நடந்துவிட்டதால், கூட்டத்தினர் எல்லோரும் மேடை நோக்கி ஓடிவந்து கயவனைப் பிடிப்பதற்கு முனைந்தனர்; ஒலிபெருக்கி வேலை செய்யாததாலும்--விளக்குகள் அணைந்து இருள் கப்பியிருந்ததாலும் தொடர்ந்து பேச்சாளர்கள் பேச முடியவில்லை; கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அனைவரும், 'அண்ணு புகழ் ஓங்குக--கழகம் வாழ்க--கலைஞர் வாழ்க' என முழக்கமிட்டவாறு இருந்தனர்.

ஒளிந்திருந்து கல் வீசியவன் அந்த நேரத்தில் கூட்டத்தினர் கையில் சிக்கியிருந்தால் என்ன ஆகியிருப்பான் என்பதைச் சொல்ல இயலாது; அந்த அளவுக்கு நமது கழகத் தோழர்கள் உணர்ச்சிவயப்பட்டிருந்தனர்.

'கூட்டம் தொடர்ந்து நடந்தே ஆகவேண்டும்' என்று அனைவரும் ஒருமித்த குரலில் கூறினர்; ஆனல் ஒலிபெருக்கி வேலை செய்யவில்லை; வேறு ஒலிபெருக்கியை உடனே கொண்டுவந்து பொருத்தவும் வாய்ப்பில்லை; எனவே, நாங்களே கூட்டத்தை முடித்துவிடுமாறு கூறிவிட்டோம்.

அன்று காலையிலிருந்தே மாற்றுக் கட்சிக் காலிகளும்--கூலிகளும், 'கூட்டத்தை நடத்த முடியாமல் செய்யவேண்டும்' என்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தார்களாம்; 'கூட்டம் நடத்த விடமாட்டோம்' என்று துண்டறிக்கைகள் கூட அச்சடித்திருந்தார்கள், அந்தத் துண்டறிக்கை ஒன்று மேடையிலேயே எங்களிடம் தரப்பட்டது; எனினும், எதிரிகள் நேரடியாக வந்து மோதியிருந்தால், கூட்டத்தினர் அவர்களுக்குத் தக்க பாடம் புகட்டியிருப்பார்கள். கல் வந்து விழுந்ததும் கூட்டத்தினருக்கு ஏற்பட்ட ஆத்திர உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவதே கடினமாகிவிட்டது; இது முதல் நாள் நிகழ்ச்சி.

அடுத்த நாள் கூட்டம், லேபர் கேம்பில் அண்ணு பிறந்த நாள் விழாக் கூட்டமாகும்; நமது தோழர்கள் ஒவ்வொருவரும் அமைதி காக்கும் தொண்டர்களாகச் செயல்பட்டனர்; முதல் நாள் கூட்டத்தில் எதிரிகள் நடந்துகொண்டது, தூங்கிய சிங்கத்தை இடறிவிட்டதுபோல் ஆகிவிட்டது!

முதல் நாள் கூட்டத்திற்கு வந்திருந்ததைப்போல் இரண்டு மூன்று மடங்கு கூட்டம் கூடியிருந்தது; காவல்துறையினரும் நல்ல முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

தோழர் வள்ளுவன் தலைமை ஏற்க--தோழர் கா. பழனி வரவேற்க--பம்பாய் தி.மு.க. செயலாளர் எஸ். தியாகராசன், அன்புச்செழியன், சு. வள்ளிநாயகம், நெல்லைவளவன் ஆகிய உள்ளூர்த் தோழர்கள் பேச, நான், 'அண்ணு பிறந்த நாள் மலரை' வெளியிட்டேன்; தோழர் எஸ் இராமானுசம் முதல் மலரைப் பெற்றுக்கொண்டார்; அடுத்து, முன்னுள் மேயர் சா. கணேசன் அண்ணு படத்தைத் திறந்துவைத்துப் பேசிய பிறகு, இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி. அவர்கள் சுமார் ஒரு மணிநேரம் பேசினார்கள்.

கூட்டம் அமைதியாக நடைபெற்றது; அன்றைய கூட்டத்தையும் நடத்த விடப்போவதில்லை என்று சவால் விட்டவர்கள் எங்கே போனார்கள் என்பதே தெரியவில்லை!

அண்ணு பெயரைத் தங்கள் புதிய கட்சிக்குச் சூட்டிக்கொண்டிருப்பதாகக் கூறுபவர்கள், அண்ணு பிறந்த நாள் விழாவை நடத்த விடாமல் செய்யப்போவதாகத் துண்டறிக்கையே வெளியிட்டிருந்ததுதான் விநோதமாக இருக்கிறது; அண்ணுவின் கொள்கையையும்--அறவழியையும் எந்த அளவுக்கு அவர்கள் கடைபிடிக்கப்போகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள இது ஒன்றே போதுமான சான்றாகும்.

மறுநாள் எஸ். எஸ். ஆர். அவர்கள், தம் குழுவினருடன், பம்பாயின் மற்றொரு பகுதியில், 'வள்ளுவர்' பற்றிய வில்லுப்பாட்டுக் கலைநிகழ்ச்சி நடத்தினர்; அமைதியாகக் கூட்டம் நடைபெற்றது.

அடுத்த நாள் நானும்--திரு. சா. கணேசன் அவர்களும் தாராவியிலுள்ள பம்பாய் தி. மு. க. மத்தியக் குழு அலுவலகமான 'திராவிடரக'த்தைப் பார்வையிடச் சென்றிருந்தோம்; மத்தியக் குழுச் செயலாளர் திரு. எஸ். தியாகராசன் மற்றும் நிர்வாகிகளான ஆரிய சங்காரன், த. மு. பொற்கோ, சு. வள்ளிநாயகம் மற்றும் தோழர்கள் பி. எஸ். செல்லையா, மா. முத்துக்கிருட்டினன், சீனிவாசன், நெல்லை வளவன், களத்தை வேலன், இராசன், கொ. வள்ளுவன், அன்புமணி, இராசேந்திரன் போன்ற தோழர்களெல்லாம் அங்கு குழுமியிருந்து எங்களை வரவேற்றனர்.

மத்தியக் குழு அலுவலகம் எளிய முறையில் அமைந்திருந்தாலும் மிகச் சிறந்த முறையில் பதிவேடுகள்--கணக்கு வழக்குகள்--பத்திரிகைத் தொகுப்புகளெல்லாம் வைத்துப் பேணிக் காக்கப்பட்டு வருவதை அறிந்து மகிழ்ந்தோம்.

1949-ல் கழகம் துவக்கப்பட்ட காலந்தொட்டு இன்று வரையுள்ள எல்லாம் பதிவேடுகளையும், வரவு-செலவுக் கணக்குகளையும் எங்களுக்கு எடுத்துக் காட்டினார்கள்; பம்பாயில் உள்ள கிளைக் கழகங்கள்--துணைமன்றங்கள்--உறுப்பினர்கள் பட்டியலையும் பார்வையிட்டோம்.

பம்பாயில் இரண்டு கழக உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் கழகத்தைவிட்டுச் செல்லவில்லை என்பதையும், கிளைக் கழகமோ--துணைமன்றமோ எதுவும் கலைக்கப்படவில்லை என்பதையும் திட்டவட்டமாக அவர்கள் தெரிவித்ததுடன், புதுக் கட்சி துவக்கியிருப்பதாகவும்--புதுக் கட்சிக் கொடி ஏற்றியிருப்பதாகவும் பத்திரிகைக்குச் செய்தி கொடுத்தவர்கள் யார் என்பதையும், அவர்களுடைய பூர்வோத்திரத்தை'யும் அவர்கள் சொல்லக் கேட்டறிந்தோம்.

நேற்று வரை வலது கம்யூனிஸ்டுக்காரர்களாகத் தாராவியில் உலா வந்துகொண்டிருந்த இரு நபர்கள்தாம் அந்தப் புதுக் கட்சிப் பிரமுகர்கள்! இவர்களுடன், 'ரசிகர்கள்' எனப்படும் சிலர் சேர்ந்துகொண்டு ஆக பத்துப் பதினைந்துபேர் கூடி புதுக் கட்சிக் கொடியை ஏற்றினார்களாம்; இதைத் தவிர, பம்பாயில் வேறு ஒன்றும் நடைபெறவில்லை.

'தி.மு.க. கூட்டம் நடைபெற முடியாமல் தடுத்துவிட்டோம்' என்று தமிழகத்திலுள்ள புதுக் கட்சி ஸ்தாபகருக்குத் தெரியப்படுத்தி 'அதற்குண்டான' பயனைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்விரண்டு மூன்று பேர், முதல்நாள் நமது கழகக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தனர்.

பக்கத்தில் இருந்த ஒரு பங்களாவின் மதில் சுவருக்குப் பின்னல் மறைந்து நின்றுகொண்டு கல் வீசியதால் கூட்டத்தினர் கையிலோ போலீசார் கையிலோ அவர்கள் பிடிபடாமல் தப்பிச் சென்றுவிட்டனர்; அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள், சிண்டிகேட்டர்களும்--இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்களுமே யாவர்.

பம்பாயில் நமது கழகம் கட்டுக்கோப்புடன் இருக்கிறது; புதுக் கட்சி ஸ்தாபகரிடம் கைக்கூலி பெறுவதற்காக அங்கிருந்து சிலர் இங்குள்ள பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

பம்பாயில் நாங்கள் பல கிளைக் கழகங்களுக்கும், துணை மன்றங்களுக்கும் சென்று, ஒவ்வொரு கழகத் தோழரையும் தனியாகவும், கூட்டாகவும் சந்தித்தோம்; கழக ஆதரவாளர்களையும் சந்தித்து உரையாடினோம்.

கழகத்தில் உறுப்பினராக இல்லாத--ஆனல் கழகத்தின்பால் பற்றும் பாசமும் கொண்டுள்ள பல்வேறு தொழிலாளத் தோழர்களையும், பாட்டாளிகளையும்கூடச் சந்தித்தோம்; எல்லோருமே, கலைஞர் தலைமையில் உள்ள கழக ஆட்சிக்கு ஆதரவாகவே உள்ளனர்; 'தலைமைக் கழகம் எடுத்த முடிவே சரியானது' என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

தாயகத்தில் தி. மு. கழகத்துக்கோ--தி. மு. க. ஆட்சிக்கோ ஏதேனும் ஊறுநேரிட்டால், எந்த அளவுக்குத் தமிழ் மக்கள் வாழ்வு பாதிக்கப்படும் என்பதையும் அவர்கள் உணர்ந்து கூறுகின்றனர்.

"நாங்கள் என்றும் அண்ணு அமைத்த கழகத்தின் பக்கம்தான் இருப்போம்; கலைஞரின் கரத்தை வலுப்படுத்த முன்னிலும் பன்மடங்கு ஆர்வத்துடன் ஈடுபடுவோம்" என்று அவர்கள் எங்களிடம் கூறினர்.

ஊனமடைந்த வீரர்களுக்கு வேலை வாய்ப்பு

புதுடில்லி, அக். 31—

சென்ற டிசம்பர் போரில் ஊனமடைந்த வீரர்களின் மறுவாழ்வுக்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போரினுல் சுமார் 1 000 பேர் ஊனமடைந்திருக்கக்கூடும்; இவர்களில் 400 பேர்களுடன் பேட்டிகள் நடத்தப்பட்டு இவர்களின் தேவை அறியப்பட்டுள்ளது.

200-க்கும் மேற்பட்டவர்கள் நேரடி வேலைவாய்ப்பினையே விரும்புகின்றனர்.

150 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகளுக்கும், சுய தொழில் தொடங்குவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மீதமுள்ள 600 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்; இவர்களின் மறுவாழ்வுக்கான உதவிகள் அனைத்தும் செய்யப்படும்.

ஊனமடைந்த வீரர்களுக்கு இயன்றவரையில், அவர்களுடைய சொந்த இடங்களுக்கு அருகாமையிலேயே வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதில் அரசு ஆர்வம் கொண்டுள்ளது.

எல்லா நகராட்சிகட்கும் குடிநீர் வசதி

அடுத்த ஆண்டுக்குள் திட்டம் நிறைவேறும்

குடிநீர் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் அறிவிப்பு

சென்னை, அக். 31—

"தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் அடுத்த ஆண்டிற்குள் (1973-ம் ஆண்டுக்குள்) குடிநீர் வசதி செய்து தரப்படும்"

என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பன் கூறினர்.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு ஆயுள் இன்சூரன்சு நிறுவனம் (எல்.ஐ.சி) ரூ 2,10,00,000 கடன் வழங்கும் விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்ட ஆயுள் இன்சூரன்சு நிறுவனத்தின் தென் வட்டார நிர்வாக மத்தான், ரூ. 2 10 கோடிக்கான தமிழ்நாடு குடிநீர் வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பனிடம் கொடுத்தார்.

விழாவில் திரு. கந்தப்பன் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழ்நாடு குடிநீர் வாரியம் தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக முதன் முதலாக ஆயுள் இன்சூரன்சு நிறுவனத்திடம் இருந்து ரூ 2.10 கோடி கடன் பெற்றிருக்கிறது; இந்த வாரியம் சுமார் ரூ. 47 கோடி அளவுக்குத் திட்டங்கள் தீட்டி வேகமாகச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் அடுத்த ஆண்டுக்குள் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும்; அதை அடுத்து 600 பேரூராட்சி மன்றங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

சென்னைக்குக் காவிரி நீர் கொண்டுவரும் வீராணம் திட்டத்திற்காக, கடந்த ஆண்டு ஆயுள் இன்சூரன்சு நிறுவனம் ரூ. 5 கோடி கடன் கொடுத்திருக்கிறது; வேகமாக நடைபெற்று வரும் இந்தத் திட்டத்திற்கு ஆயுள் இன்சூரன்சு நிறுவனம் இந்த ஆண்டு மேலும் ரூ. 5 கோடி கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் நிர்வாக இயக்குநர் ஜே. எஸ். பாங்கோ வரவேற்றுப் பேசினர்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

ரூ. 51,165 கோடி முதலீடு செய்ய முடிவு

1974-ம் ஆண்டு ஏப்ரலில் தொடங்கும்

புதுடில்லி, அக். 31—

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1971–72-ம் ஆண்டு விலைவாசி நிலவரப்படி) மொத்தம் ரூ 51,165 கோடி முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் அரசுத் துறை முதலீடு ரூ 35 595 கோடியாக இருக்கும்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி தலைமையில் நேற்று நடைபெற்ற திட்டக் குழுக் கூட்டம்; 5-வது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறையை இறுதியாக்கியது.

அடுத்த ஆண்டு ஏப்ரலுக்குள் நகல் திட்டம் தயாராகும்; 5-வது ஐந்தாண்டுத் திட்டம் 1974-ம் ஆண்டுமுதல் 1979-ம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

திட்ட அணுகுமுறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:—

குறைந்தபட்சத் தேவைகள் சம்பந்தமாக ஒரு தேசியத் திட்டத்தை வகுப்பது.

உணவுத் தானியங்கள்--பருத்தி--எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் சுயதேவை நிறைவு நிலையை அடைவது.

உருக்கு--உரங்கள்--எண்ணெய்கள்--எஞ்சினீயரிங் துணைக் கருவிகள்--அடிப்படை இரசாயனங்கள் போன்றவற்றின் உற்பத்தியை அதிகப்படுத்துவது.

ஆண்டுக்கு ரூ. 5 50 சதவிகிதம் வளர்ச்சி காண்பது.

ஏற்றுமதித் துறையில் ஆண்டுக்கு 7 சதவிகிதம் வளர்ச்சி காண்பது.

1978–79-ல் அந்நிய உதவியை அறவே பெருத நிலையைக் காண்பது.

பின்தங்கிய பகுதிகள்--பின்தங்கிய வகுப்பினர் மேம்பாட்டுக்கு முன்னுரிமை தருவது.

விலைவாசிகள்--ஊதியங்கள்--வருமானங்கள் சம்பந்தமாக ஒன்றோடொன்று ஒத்திருக்கின்ற ஒரு கொள்கையைப் பேணுதல்.

சமூக நீதிக்கு ஏற்றவாறு வளர்ச்சி அமையுமாறு பார்த்துக் கொள்ளுவது.

திட்டப் பணி மேலும் சிறப்பாகச் செயல்பட நிர்வாக இயந்திரத்தின் செயல்முறையை மேம்பாடு செய்வது.

புதிய உள்நாட்டுக் கடித மடல்

இன்று வெளியிடப்படுகிறது

புதுடில்லி, நவ. 1—

கடிதம் போய்ச் சேரவேண்டிய ஊரின் எண் வரிசையை எழுதுவதற்கான இடம் கொண்ட புதிய உள்நாட்டுக் கடித மடல், இன்று முதல் விற்பனைக்கு வருகிறது. (கடிதம் போய்ச் சேரவேண்டிய ஊர், அஞ்சல் நிலையம் ஆகியவற்றுக்கான எண் வரிசையைக் குறிப்பிடும் முறைக்கு 'பின்கோடு' என்று பெயர்.)

கடிதங்களை ஊர்வாரியாகப் பிரிப்பதற்கும்--எளிதில் பட்டுவாடா செய்வதற்கும் ஏற்றது இந்த முறை.

தவக்கத்தில் இந்தக் கடித மடல் பம்பாய்--கல்கத்தா--சென்னை--புதுடில்லி ஆகிய நகரங்களில் மட்டுமே விற்பனையாகும்; போதிய அளவில் அச்சிடப்பட்ட பின்னர் மற்ற இடங்களிலும் விற்பனைக்கு வரும்.

புதிய கடித மடலில் 15 காசு அஞ்சல் தலையும்--5 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் தலையும் பொறிக்கப்பட்டிருக்கும்; ஆங்கிலம்--இந்தி ஆகிய மொழிகளில் வாசகங்கள் அச்சிடப்பட்டிருக்கும்.

புழக்கத்திலிருக்கும் பழைய உள்நாட்டுக் கடித மடல்களும் தொடர்ந்து விற்பனையாகும்.

சேலம் உருக்காலைத் திட்டம்

செயல்படுத்த புதிய நிறுவனம்

பொருளாதாரச் சுதந்தரத்தை நோக்கிச் செல்வதில் மற்றொரு நடவடிக்கை

சென்னை, அக். 31—

சேலம் சிறப்பு உருக்குத் தயாரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக--கம்பெனி சட்டத்தின்படி--'சேலம் ஸ்டீல் லிமிடெட்' என்ற புதிய நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய நிறுவனம் ரூ. 100 கோடி மூலதனத்துடன் இயங்கும்; இதன் தலைமை நிலையம் சேலத்தில் இருக்கும்.

சேலம் உருக்காலையில் ஆண்டுக்கு 70 000 டன் உயர்ந்த ரக உருக்கு (துருப்பிடிக்காத உருக்கு) உற்பத்தி செய்யப்படும்.

ஆண்டிற்கு 1.95 இலட்சம் டன் உருக்குத் தகடுகளும்--உருக்குத் துணுக்குகளும் தயாரிப்பதற்குரிய அளவில் சேலம் உருக்காலை வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

புதிய நிறுவனம் வெற்றி பெற வாழ்த்துத் தெரிவித்து அனுப்பியுள்ள செய்தியில், வி. வி. கிரி அவர்கள், 'பொருளாதாரச் சுதந்தரத்தை நோக்கிச் செல்வதில், இது மற்றொரு நடவடிக்கை' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக வி. சுப்பிரமணியம் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அமைச்சர் மாதவன் வலியுறுத்தல்

இந்தப் புதிய நிறுவனம் அமைக்கப்பட்டிருப்பதையொட்டி நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'இந்தத் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பையும் தருவதற்குத் தயாராக இருக்கிறது.

சேலம் இரும்பாலைத் திட்டத்தில் நாங்கள் பங்கு கேட்கவில்லை; ஆனல், 'நிர்வாகத்தில் நாங்களும் உங்களுடன் சேர்ந்து இருக்க வேண்டும்' என்றுதான் சொல்கிறோம்.

சேலம் உருக்காலையைச் சுற்றி ஒரு பெரிய தொழில் மண்டலம் அமைய வேண்டும்; உருக்காலை நிர்மாணத்திற்குத் தேவைப்படக்கூடிய துணைக் கருவிகளையும்--சாதனங்களையும் அதைச் சுற்றி அமையக்கூடிய தொழில்கள் வழங்க முடியும்; உருக்காலையின் தயாரிப்புகளையும் அவை பயன்படுத்த முடியும்."

தமிழக அரசுக்கு

மத்திய அமைச்சர் பாராட்டு

விழாவில் மத்திய அமைச்சர் மோகன்குமாரமங்கலம் கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:—

"சேலம் உருக்காலைத் திட்டம் மிகப் பெரிய திட்டமாகும்; மற்ற இடங்களில் உற்பத்தி செய்யப்படும் உருக்குபோல் அல்லாமல், இங்கே உயர்ந்த ரக உருக்குத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது; எனவேதான் திட்டம் தீட்டுவதில் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டது; இப்போது சேலம் உருக்காலைத் திட்டத்திற்கான வேலைகள் வேகமாக நடந்து வருகின்றன.

சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக நிலம் ஒதுக்குவதில் தமிழக அரசு நல்ல முறையில் உதவி செய்திருக்கிறது; அத்துடன் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டங்கள் விரைவாக நிறைவேறச் சிறந்த முறையில் ஒத்துழைப்பு கொடுத்த தமிழக அரசுக்கு பாராட்டுகளையும்--நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் உருக்குத் தொழிற்சாலைக்கான இடம் ஒதுக்கும்போது அந்தப் பகுதியிலுள்ள ஆயிரம் குடும்பங்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மாற்று இடத்திற்கு அனுப்பப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஒருவருக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது; இது தவிர, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க வழி ஏற்படும்.

இந்தத் திட்டத்தின் முதற்கட்ட வேலை முடிவடைந்து உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தம் 6 ஆண்டுகளில் இங்கே முழு உற்பத்தி தொடங்கிவிடும்; இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற அனைவருடைய ஒத்துழைப்பும் குறிப்பாக இந்த பகுதி மக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

இந்தியாவில் இதுவரையில் உருக்கு ஆலைகள் அமைக்கப்பட்ட விதத்திலிருந்து வேறுபட்ட விதத்தில் சேலம் உருக்கு ஆலை அமைக்கப்படும்.

துருப் பிடிக்காத உருக்கை (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) தயார் செய்வதற்கு வேண்டிய தொழில் நுட்பத் திறன் பெருக இது இது உதவிகரமாக இருக்கும்.

துரும் பிடிக்காத உருக்குத் தயாரிக்கத் தேர்ந்த தொழில் நுட்பத் திறனும்--கம்ப்யூட்டர்கள் (கணக்கீடு இயந்திரங்கள்) உட்பட மிக நுட்பமான சாதனங்களும் அவசியம்.

துரும் பிடிக்காத உருக்குத் தயாரிப்பதற்கான நடைமுறை மிகவும் நவீனமானது; சேலம் உருக்கு ஆலைக்கு மிகவும் பொருத்தமானது."

புற்று நோய்க்குக் குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை காரணமா?

'இல்லை' என நிபுணர் குழு அறிவிப்பு

இலண்டன், அச். 31—

"குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகளை நீண்டகாலம் பயன்படுத்தினுல் புற்று நோய் வரும் என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை"

என்று, பிரிட்டனில் உள்ள மருத்துவப் பாதுகாப்புக் குழு அறிவித்திருக்கிறது.

விற்பனை செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த மாத்திரைகளை விற்கலாம் என்று அது அனுமதித்திருக்கிறது.

எட்டு ஆண்டுகட்கு முன்பு இந்தக் குழு அமைக்கப்பட்டது.

மேற்கண்ட மாத்திரைகளை ஆய்வின் முடிவுகள் தெரியும்வரையில் விற்பனை செய்ய வேண்டாம் என்று (…) தடை செய்திருந்தது; இப்போது மேற்கண்டவாறு முடிவுகள் தெரிந்ததும் மாத்திரை விற்பனை அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

நோயறிய புதிய கருவி

புதுடில்லி, அக். 31—

காது--மூக்கு--தொண்டை ஆகிய உறுப்புக்களில் ஏற்படும் நோய்களைச் சோதித்துக் கண்டுபிடிக்கக்கூடிய புதிய கருவி ஒன்றை டேராடூனிலுள்ள பாதுகாப்புக் கருவிகள் ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம் உருவாக்கியிருக்கிறது.

இராணுவ மருத்துவப் படையினர் அந்தப் புதிய கருவியைக் கொண்டு இப்போது சோதனைகள் நடத்தி வருகின்றனர்.

தொழில்நுட்ப அறிவுபெற அந்நியச் செலாவணி

தடுத்து நிறுத்த நடவடிக்கை--

அமைச்சர் செ. மாதவன் யோசனை

சென்னை, அக். 27—

"தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்காக அந்நியச் செலாவணி செலவானதைத் தடுக்கும் பொருட்டு, உள் நாட்டிலேயே தொழில் நிறுவனங்களிடையே தொழில்நுட்ப அறிவு பரிமாற்றத்துக்கு ஏதாவது நடவடிக்கையை மத்திய அரசு உருவாக்க வேண்டும்.

"உதாரணமாக, மோட்டார் டயர் தயாரிப்புத் துறையில் அந்நிய ஒத்துழைப்புடன் நிலைபெற்று தொழிற்சாலைகள் ஏற்கனவே உள்ளன; எனினும், அந்நிய ஒத்துழைப்புடன் புதிய தொழிற்சாலைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன; தொழில் நுட்ப அறிவை உள்நாட்டிலேயே பெறுவதற்கு வசதி இருந்தபோதிலும் தொழிலதிபர்கள் வெளிநாட்டிலிருந்து தொழில்நுட்ப அறிவைப்பெற முயற்சிக்கின்றனர்; ஏற்கனவே நிலைபெற்று--தொழில் நுட்ப அனுபவமும் நிரம்பப்பெற்ற தொழில் நுட்ப அறிவை நாட்டிலுள்ள இதர தொழில் நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கு மத்திய அரசு வழி வகுக்கவேண்டும்"

என்று, தொழில் அமைச்சர் திரு. மாதவன் அவர்கள், இளம் தொழில் முயற்சியாளரின் தேசியக் கூட்டணியின் தமிழ்நாடு கிளையைத் தொடர்ந்து வைத்துப் பேசுகையில் வலியுறுத்தினர்.

தொழிலாளர்கட்கு வீடு

தொழிலதிபர்களைக் கட்டாயப்படுத்த அரசு யோசனை

புதுடில்லி, அக். 31—

தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளருக்கு வீடுகள் கட்டித்தரும்படி தொழிலதிபர்களைக் கட்டாயப்படுத்தும் பிரச்சினை பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்யும் பிரச்சினையில் தொழிலதிபர்கள் மிகவும் மெத்தனமாக இருப்பது மத்திய அரசுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது; இப்பிரச்சினையில் ஏதாவது செய்ய வேண்டுமென அரசு கருதுகிறது.

தஞ்சை பெரிய இராசராசன் விழா

மூன்று அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்

திருவாரூர், நவ. 1—

தஞ்சையில் கடந்த நான்கு ஆண்டுகளாக இராஜராஜசோழன் சதயத் திருவிழா நடைபெற்றுவருகிறது; இந்த ஆண்டும் அந்த விழா நவ. 15, 16-ம் நாட்களில் கொண்டாடப்படுகிறது.

விழாவில் அமைச்சர்கள் தர்மலிங்கம், மன்னை ப. நாராயணசாமி, மு. கண்ணப்பன் மற்றும் குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி. முதலியோர் கலந்துகொள்கின்றனர்.

விழாவையொட்டிக் கருத்தரங்கு--பட்டி மன்றம்--கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்தியாவின் ஏற்றுமதி-இறக்குமதி நிலைமை

புதுடில்லி, அக். 31—

1972-ம் ஆண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையிலான காலத்தில் இந்தியாவின் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 756 27 கோடியாகவும், இறக்குமதியின் மதிப்பு ரூ. 700.45 கோடியாகவும் இருந்தது; அதாவது, ஏற்றுமதியின் மதிப்பு இறக்குமதியின் மதிப்பைவிட ரூ. 55.82 கோடி கூடுதலாக இருந்தது.

1971-ம் ஆண்டின் இதே காலத்தில் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 639.80 கோடியாகவும், இறக்குமதியின் மதிப்பு ரூ. 764,96 கோடியாகவும் இருந்தது; அதாவது, ஏற்றுமதியின் மதிப்பு இறக்குமதியின் மதிப்பைவிட ரூ. 125,16 கோடி குறைவாக இருந்தது.

குடும்பநலத் திட்ட முன்னேற்றம்

தாமதத்திற்குக் காரணம்

நாட்டின் சில பகுதிகளில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆமை வேகத்தில் முன்னேறிவருகிறது; இதற்கான காரணங்களை ஆராய்வதற்காக இந்திய அரசு குழு ஒன்றை நியமனம் செய்தது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் விரைந்து முன்னேறுவதற்கான வழிவகைகள் பற்றி ஆலோசனை கூறுமாறும் குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது; இந்தக் குழு தனது அறிக்கையை அளிப்பதற்கான இறுதி நாள் கடந்த செப்டம்பர் 30-ம் நாளிலிருந்து டிசம்பர் 31-ம் நாள்வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

மா. இராசாங்கம் இல்லத்தில் நாவலர்

குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினர்

தி. மு. கழக முன்னணித் தோழரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மறைந்த மா. இராசாங்கம் அவர்களின் இல்லத்திற்குப் பொதுச்செயலாளர் அவர்கள் சென்று--அவரது குடும்பத்தாருக்கு இரங்கலும் ஆறுதலும் தெரிவித்துக் கொண்டார்.

இராசாங்கத்தின் உருவப் படத்திற்கு நாவலர் அவர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நாவலர் அவர்களுடன், திரு. பழனிவேல்ராசன் எம்.எல்.ஏ. அவர்களும் சென்றிருந்தார்.

தரு தழைக்கக் குருதி சிந்தினேம்

வளர்ந்து மரமாகி நிழல் தந்துகொண்டிருக்கிறது

இங்கு இரு மத்திய அமைச்சர்கள் இதனை வீழ்த்தத் திட்டமிடுவதேன்?

அடையாளம் தெரியாதவர்களை நம்பிச் செயல்படும் விசித்திரம் -- கழகத் தலைவர் கலைஞர் கடிந்துரை

சேலம், அக். 31—

"தி. மு. கழகம் ஏதோ அருமையான தோட்டத்திலே கொண்டுவந்து வைக்கப்பட்ட மலர்ச் செடி அல்ல! இந்தத் தருவை உருவாக்க 'சித்திரச் சோலைகளே உமை நன்கு திருத்த இப்பாரினிலே -- எத்தனைத் தோழர்கள் இரத்தம் சொரிந்தனரோ உந்தன் வேரினிலே' என்று கேட்டாரே பாவேந்தர் பாரதிதாசன் -- அதைப்போல்; தி. மு. கழகம் என்கின்ற தருவை வளர்க்க -- அது விழுதுவிட -- இலைகள் தழைக்க -- அதிலே பறவைகள் கூடு கட்ட -- 'அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு -- மன்னர்க்கிருக்க நிழலாகும்மே' என்று சொல்லும் அளவுக்கு நிழல் தரும் தருவாகத் தி. மு. கழகம் உருவாகிட இரத்தம் சொரிந்த தோழர்கள் கழகத்தின் பக்கம் இருக்கிறார்கள்; ஆகவே அஞ்சேல் -- வெற்றி நமதே"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், சேலத்தில் கைத்தறி ஆடை விற்பனை நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகை [illegible] தெளிவுற விளக்கிக் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இங்கே வந்து, சட்டம் -- ஒழுங்கு -- அமைதி கெட்டுவிட்டதாக மத்திய அமைச்சர்கள் மோகன் குமாரமங்கலமும், சி. சுப்பிரமணியமும் பேசுகிறார்கள்.

வடக்கில் எத்தனையோ மாநிலங்களில் பயங்கரமான கலவரங்கள் -- வன்முறைச் சம்பவங்கள் -- கண்ணீர்ப்புகைப் பிரயோகம் -- தடியடி -- துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கின்றன -- நடக்கின்றன என்ற செய்திகள் பத்திரிகைகளில் வந்தவண்ணம் இருக்கின்றன; ஆனால் எந்த மத்திய அமைச்சராவது பைசூருக்கோ -- மகாராஷ்டிரத்திற்கோ -- மத்தியப் பிரதேசத்திற்கோ -- ஒரிசாவுக்கோ -- உத்தரப் பிரதேசத்திற்கோ சென்று சட்டம் -- ஒழுங்கு கெட்டுவிட்டதாகச் சொல்கிறார்களா?

அங்கெல்லாம் சென்று, 'சட்டம் -- ஒழுங்கு காப்பாற்றப்படாவிட்டால் மத்திய அரசு தலையிடுமென்று' எந்த அமைச்சராவது சொல்லியிருக்கிறாரா? இங்கே மட்டும் வந்து சொல்வதற்கு என்ன காரணம்?

இந்தியாவின் பூகோளப் படத்தை எடுத்துக்கொண்டால், எல்லா இடங்களிலும் ஒரே நிறம் -- இ. காங்கிரசு அரசு!

தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும்தான் தி. மு. கழகத்தின் நிறம்; இதையும் பூசி மெழுகி விட வேண்டுமென்று கருதுகிறார்கள்; அதற்காகத்தான் இந்த முயற்சியிலே ஈடுபடுகிறார்கள்.

'யாரைவைத்து கலகத்தை உண்டாக்கலாம்' என்று எண்ணுகிறார்கள்; சிலபேர் அதற்கு 'நான் -- நான்' என்று சொல்கிறார்கள்; அவர்கள் தமிழ் நாட்டு மக்களுக்கு அடையாளம் தெரியாதவர்கள்!

விழாக்களில் திரைப்படம் எடுக்கும் நேரங்களில், சிறுவர்கள் தங்கள் கையை ஆட்டுவார்கள்; நாளைக்குத் தியேட்டரில் படம் போட்டால் தங்கள் கை தெரியும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால், படத்தில் அவர்கள் தெரிய மாட்டார்கள்!

அதைப் போலத்தான், தி.மு.கழகத்திற்குச் சங்கடம் வந்தால சில கட்சிக்காரர்கள் கையை ஆட்டுகிறார்கள் -- 'நானும் செய்வேன் -- நானும் செய்வேன்' என்று!

எப்படி அறியாத்தனத்தால் சில சிறுவர்கள் படம் எடுக்கும் போது அந்த வெளிச்சத்திலே கையை ஆட்டுகிறார்களோ அதைப்போல மாற்றுக் கட்சிக்காரர்களும் நடந்து கொள்கிறார்கள்.

அவர்களெல்லாம் ஏமாந்து விடுவார்கள் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்."

உணவுத்துறை அமைச்சர்

ப. நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

நவ. 2 காலை 10 மணி: கரூர் நகராட்சி வரவேற்பு; மாலை 4 30 மணி: திருக்காம்புலியூர் பொது மக்கள் வரவேற்பு; 6 மணி: தாராபுரம் பொதுமக்கள் வரவேற்பு; இரவு 8-மணி: க. பரமத்தி பொதுமக்கள் வரவேற்பு.

தமிழக அரசின் உத்தரவுசெல்லும்

பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்கத் தடை

உறுதிப்படுத்தி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு

சென்னை, அக். 31—

"தமிழ் நாட்டில் பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகளை விற்கக் கூடாது என்று தடை விதித்துத் தமிழ்நாடு அரசு பிறப்பித்த உத்தரவு செல்லும்"

என்று, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கே. வீராசாமியும் -- நீதிபதி வி. இராகவனும் தீர்ப்பு அளித்தனர்.

பரிசுச் சீட்டு விற்பனை சம்பந்தமாகத் தமிழ்நாடு அரசாங்கம் பிறப்பித்த உத்தரவுகளைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களைத் தள்ளுபடி செய்து நீதிபதிகள் தீர்ப்பு அளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த மாநிலத்தில் பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுக்களை விற்பதன் மூலம் தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானம்பாதிக்கப்பட்டது.

தன்னுடைய பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து அதிகபட்ச பயனைப் பெறும்பொருட்டு இந்த உத்தரவுகளை அரசு பிறப்பித்திருக்கிறது; மனுதாரரின் அடிப்படைஉரிமை மீறப்படவில்லை; மனுதாரர் தமிழ்நாட்டுக்குள் இன்னமும் வியாபாரம் நடத்த முடியும்.

அரசியல் சட்டம் 301-வது பிரிவின் கீழ் வியாபாரம் நடத்த மனுதாரருக்கு உள்ள சுதந்தரம் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை; மற்ற மாநிலங்களின் அரசுகள்தான் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசாங்கம் தன்னுடைய அதிகாரங்களின் வரம்பை மீறி நடக்கவில்லை; தன்னுடைய அதிகாரங்களுக்கு உட்பட்டு அரசாங்கம் செயல்படும்போது வியாபாரம் நடத்தத் தனக்குள்ள உரிமை மறுக்கப்பட்டிருப்பதாக மனுதாரர் கூறுவது, வலுவற்ற வாதமாகும்; இந்த உத்தரவுகளைப் பிறப்பிக்க அரசுக்குத் தகுதி உண்டு."

கழகத்தின் பக்கமே மாணவர் படை

மருத்துவக் கல்லூரி மாணவரின்குருதி கடிதம்

கோவை, அக். 31—

"1965 மொழிப் போரில், போலீசாரின் தடியால் ஏற்பட்ட காயங்களின் தழும்புகளைத் தடவிப் பார்க்கும்போதும், 'தமிழ் வாழ்க -- இந்தி ஒழிக' என்று சொல்லி ஆர்ப்பாட்டம் செய்ததற்காக என்னைச் சிறையில் அடைத்தபோதும் எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி இன்னும் மறையவில்லை,

"இப்படி இலட்சக்கணக்கான மாணவ மணிகள் கழகத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய இன்றும் தயாராக இருக்கிறார்கள்; தியாகத்தின் அடிப்படையில் வளர்ந்த தி. மு. கழகத்துக்குத்தான் எங்கள் ஆதரவு"

என்று குறிப்பிட்டு இரத்தத்தினால் எழுதிய கடிதம் ஒன்றைக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்குக் கோவை மருத்துவக் கல்லூரி மாணவர் ஆ. அன்பழகன் எழுதியிருக்கிறார்; அவர், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தலைவராகவும் இருக்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது மத்திய தீர்மானம் செய்வதற்குடன்மையில் ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட போனசுத் தொகை கணக்கில் -- கொள்ளப்பட மாட்டாது; ஆனால், ஊழியர்களின் ஊதியத்தின் குறிப்பிட்ட சதவிதத்தில் அளிக்கப்படுவதாகக் கூறப்பட்ட போனசுத் தொகையின் அடிப்படையிலேலே இது தீர்மானிக்கப்படும்.

நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயருமா?

பிற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் எதிர்ப்பு

தி.மு.க. -- கம்யூனிஸ்டு -- முஸ்லிம் லீக் கட்சிகள் ஆதரவு

புதுடில்லி, நவ. 1—

மக்கள் தொகை பெருகிவருவதால், நாடாளுமன்ற (மக்களவை) உறுப்பினர்களின் எண்ணிக்கையை 520 லிருந்து 570-ஆக உயர்த்த வேண்டுமென்று தேர்தல் குழு பரிந்துரைத்திருக்கிறது; இதுபற்றி ஆலோசிக்க எதிர்க் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை இந்திரா காந்தி நேற்று கூட்டினர்.

உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தி. மு. கழகம் -- வலது கம்யூனிஸ்டு -- இடது கம்யூனிஸ்டு -- முஸ்லிம் லீக் -- கேரளக காங்கிரசு ஆகியவை ஆதரவு தெரிவித்தன.

ஆனால், சிண்டிகேட் -- ஜனசங்கம் -- பாரதீய கிரந்திதளம் -- சோஷலிஸ்டு -- குடியரசுக் கட்சி ஆகியவை, 'எண்ணிக்கையை உயர்த்தக்கூடாது' [illegible]று வற்புறுத்தின; 'மக்கள் தொகை ஆண்டு தோறும் கூடிக்கொண்டேதான் போகும்; அதற்காக ஆண்டுதோறும் எம்.பி.-க்[illegible]ரின் எண்ணிக்கையையும் கூட்டிக்கொண்டு இருக்க முடியா[illegible]று அந்தக் கட்சிகள் கூறின.

ஆ[illegible]சனைக்குப் பிறகு இந்திரா காந்தி பேசுகையில், 'உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் பிரச்சினையில் அரசு எந்த முடிவுக்கும்வரவில்லை; எதிர்க்கட்சிகள் சொன்ன கருத்துக்களை மனதில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.

விலைவாசி உயர்வு -- பாகிஸ்தானின் போக்கு ஆகியவை பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகள்

மத்திய அரசு அதிகாரி சுற்றிப்பார்த்தார்

பூவிந்தவல்லி, அக். 31—

திருப்பெரும்புதூர், குன்றத்தூர் ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த சில இடங்களில் வறண்ட நிலங்களையும் -- தீய்ந்துபோன பயிர்களையும் மத்திய அரசு அதிகாரி காங்கோபாத்தியாயர் சுற்றிப் பார்த்தார்.

தென்னேரி செம்பரம்பாக்கம் ஏரி ஆகிய பெரிய ஏரிகள் தண்ணீர் இல்லாமல் வறண்டுகிடப்பதை அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இராசரத்தினம், கோபால், நாடாளுமன்ற உறுப்பினர் இலட்சுமணன், ஊராட்சி ஒன்றியத் தலைவர் பாலகிருஷ்ணன் ஆகியோர் காண்பித்து விளக்கிக் கூறினர்.

வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடக் காங்கோபாத்தியாயரை மத்திய அரசு அனுப்பியிருக்கிறது.

சென்னை 4-வது வட்டத்தில் பொதுக்குழுத் தீர்மான விளக்கப்

பொதுக்கூட்டம்

2-11-72 மாலை 7 மணிக்கு

வண்ணை சஞ்சீவிராயன் கோயில் தெருவில்

தலைவர்: பீ. கே. மூர்த்தி

பேசுவோர்:

பொதுச்செயலாளர் நாவலர்
நீலநாராயணன் எம்.எல்.சி.
மா.வே.நாராயணசாமி எம்.எல்.சி.
மு. சுருளிவேலு எம்.எல்.ஏ.
மு. வேதாசலம் எம்.எல்.ஏ.
கே. எம். கண்ணபிரான் எம்.சி.
த. வேங்கடேசன் எம்.சி.
பி. ஏ. என். இராசரத்தினம்
இரா. மு. மனோகரன் எம்.சி.
எஸ். பி. சற்குணம் எம்.சி.
வி. எஸ். ஆனந்தன் எம்.சி.
துரைராசு எம்.சி., சி. நவமணி
ஏ. இராசகோபால், மற்றும் பலர்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

2--11--72

சின்ன தாராபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெருமாள் கோவில் முன்புறமுள்ள அண்ணா திடலில்; தலைவர்: என். கே. காந்தி; பேசுவோர்: அமைச்சர் ப. நாராயணசாமி, எம். எஸ். வெங்கடாசலம், பரமத்தி சண்முகம், வி. எம். அப்துல் ஜப்பார் எம்.எல்.ஏ., எஸ். நல்லசாமி எம்.எல்.ஏ., கே. இராசு, எஸ். வடிவேல், டி. கே. பெரியசாமி.

திருச்சி மாவட்ட

தி. மா. மு. க. கூட்டம்

திருச்சி மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக உறுப்பினர் கூட்டம் 2—11—72 மாலை 5-மணிக்கு, குளித்தலை கடம்பர் கோயில் திருமண மண்டபத்தில் மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமையிலும் -- திரு. எம். கந்தசாமி எம்.எல்.ஏ. முன்னிலையிலும் நடைபெறும்; தி மா. மு. க. உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்ளுமாறு செயலாளர் வீ. சானகிராமன் கேட்டுக் கொள்கிறார்.

நாங்குநேரி வட்ட

தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

நாங்குநேரி வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம், 5—11—72 மாலை 2-மணிக்கு வள்ளியூர் பயணிகள் விடுதியில் நடைபெறும்; வட்ட உறுப்பினர்கள் தவருது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் டி. ஏ. கே. இலக்குமணன் கேட்டுக் கொள்கிறார்.

குளித்தலை வட்ட

தி. மு. க. கூட்டம்

குளித்தலை வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 2—11—72 மாலை 4-மணிக்கு கடம்பர் கோவிலில், அவைத் தலைவர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் தலைமையிலும் -- மாவட்டச் செயலாளர் எம. எஸ். வெங்கடாசலம் முன்னிலையிலும் நடைபெறும்; வட்டப் பிரதிநிதிகள் தவருது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் கு. வி. முத்துசாமி கேட்டுக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] இங்கு வெளியிடப்பெறுகிறது.